## 01. ஆய்வுத் தலைப்பு.

"ஆற்றுகைகள் மூலம் முதியோர் இல்லத்தில் வாழும் முதியவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்" பங்குகொள் ஆய்வு.

## 02. ஆய்விற்கான காரணம்.

நவீன சூழலினால் வடிவமைக்கப்படும் சந்ததியினர் மத்தியில் முதியோர்மேல் காணப்படும் பார்வை என்பது மிகவும் வித்தியாசமானது. இதே போல் முதியவர்களின் நிலமை என்பதும் வித்தியாசமானது. அதிலும் முதியோர் இல்லங்களில் வாழும் முதியோர்கள் என்பவர்களும், அவர்களது சூழலும் மிகவும் வித்தியாசமானதாகவே காணப்படுகின்றன. அச்சூழலில் அவர்கள் வாழவேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஆனாலும் அவர்களை அவர்களது சூழலிலேயே மகிழ்வாக வைத்திருப்பதே இவ் ஆய்வினுடைய காரணமாகின்றது.

அத்துடன் அச்சூழலை அவர்களுக்கு அவர்களுக்கூடாகவே பயனள்ளதாக்கி அவர்களே அவர்களுடைய மனநிலைகளை மகிழ்வாக்குதலே இவ் ஆய்வின் மிகமுக்கிய நோக்கமாகும். மேலும் நாளாந்த வாழ்வை முதியோர் இல்ல சூழலில் ஏற்படுத்தி அவர்களது மனநிலைகளில் நம்பிக்கை கொள்ள வைத்தலும் இவ் ஆய்வின் பின் நோக்கங்களில் ஒன்றாகும் மேலும் ஆற்றுப்படுத்தல் தெடர்பான ஆற்றுகைச்செயற்பாடுகளை அவர்களது வெளியில் அவர்களே தொடர்ச்சியாக செய்விப்பதும், அதனூடான மகிழ்வினை அவர்களே பெற்றுக்கொள்ளுதலும் இவ் ஆய்வின் காரணமாக அமைகின்றன.

முதியவர்களினை ஆற்றுப்படுத்துவதன் மூலம் முதியவர்களின் உடல், உளரீதியிலான மகிழ்ச்சியினை ஏற்படுத்தி அவர்களின் அனுபவத்தினை வெளிப்படுத்தலினையும் நோக்காகக் கொண்டுள்ளது. அத்துடன் முதியோர் இல்லங்களின் மேல் சமூகத்தின் பார்வையினை ஏற்படுத்துதலும் ஆய்வுச்செயற்பாட்டின் காரணங்களாகக் கொள்ள முடியும்.

## 03. ஆய்வுப் பரப்பு.

மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள ஏழைகளின் சிறிய கன்னியர்மட வயோதிபர் இல்லம்.

## 04. ஆய்வுப் பிரச்சினை.

முதியோருக்கான ஆற்றுகைச்செயற்பாடு என்று ஒன்று இதுவரை ஒரு முறையாக இனங்காணப்படாமையும், முதியோர் இல்லங்களில் வாழும் முதியோர்கள் தனித்து விடப்படுவதால் அவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் செயற்பாடு அவசியமாக காணப்படுகின்றமையினை முன்வைத்ததாக ஆய்வுப்பிரச்சினை எழுகின்றது.

## 05. ஆய்வு முறையியல்.

நேர்காணல்கள், பேட்டிமுறைகள், ஆற்றுகைகள் மூலமான பங்குகொள் ஆய்வே ஆய்வு முறையியலாகக் கொள்ளப்படுகின்றது.

## 06. ஆய்விற்கான தரவுகள்.

முதல்நிலைத் தரவுகள் : முதியோர் இல்ல முதியோர்கள், முதியோர் இல்ல ஊழியர்கள், உள வைத்திய நிபுணர்கள், மானிடவியலாளர்கள், நாடக ஆசிரியர்கள், நாடக கலைஞர்களுடனான நேர்காணல்.

இரண்டாம்நிலைத் தரவுகள் : புத்தகங்கள், சஞ்சிகைகள், தேசிய முதியோர் செயலகத்தினால் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள் போன்றவையாகும்.

07. ஆய்வுப் பகுப்பு.

இது நான்கு இயல்களாக பிரித்து நோக்கப்பட்டுள்ளது.

1. முதலாம் இயலில் சமூகத்தில் முதியோர் இல்லங்களின் வகிபங்கு ஓர் அறிமுகமாக இடம்பெற்றுள்ளது.

2. இரண்டாம் இயலில் ஏழைகளின் சிறிய கன்னியர்மட வயோதிபர் இல்லமும் ஆற்றுகைச்செயற்பாடுகளும் ஆற்றுகையினூடாக முதியோர் இல்ல முதியோரிடத்தில் அவதானித்தத மாற்றங்கள் விளக்கப்பட்டுள்ளது.

3. மூன்றாம் இயலில் முதியோர் இல்லத்தில் இடம்பெற்ற பங்குகொள் செயற்பாட்டின் மூலம் முதியோர்களுக்கூடாக உருவாக்கப்பட்ட ஆற்றுகைகள்.

4. நான்காம் இயலில் ஆற்றுகையின் போது எதிர்கொண்ட சவால்களும், அதனை எதிர்கொண்ட விதமும், ஆற்றுகை பற்றிய முதியோர்களின் அனுபவம் பற்றியதாகவும் அமைகின்றன.

பொருளடக்கம்.


பக்க எண்

நன்றியுரை i

ஆய்வு அறிமுகம் ii-v

பொருளடக்கம் vi-vii

இயல்-01 சமூகத்தில் முதியோர் இல்லங்களின் வகிபங்கு. 01-11

1.1 முதியோர் பற்றிய அறிமுகம். 01-02

1.2 முதியோர் இல்லங்களின் தோற்றத்திற்கு செல்வாக்குச் செலுத்தும் வாழ்க்கை மாற்றங்கள். 02-03

1.3 முதியோர் இல்லத்தின் மேல் சமூகத்தின் பார்வை. 04-06

1.4 மட்டக்களப்பு நகரில் முதியோர் இல்லங்கள். 07-10

1.5 ஏழைகளின் சிறிய கன்னியர்மட முதியோர் இல்லத்தின் நாளாந்த செயற்பாடுகள். 11

இயல்-02 முதியோர்களை ஆற்றுப்படுத்தலுக்கான ஆற்றுகைச் செயற்பாடு பற்றிய பார்வை. 12-18

2.1 ஆற்றுகையினை முன்னெடுக்க முதல் மேற்கொண்ட நடவடிக்கைகள். 12-15

2.2 ஆற்றுகையின் போது முதியோர் பங்குகொண்ட செயற்பாடுகள். 15-16

2.3 ஆற்றுகையின் பின்னர் முதியோர் இல்ல முதியவர்களிடத்தில் அவதானித்த மாற்றங்கள். 17

இயல்-03 ஆற்றுகையின்போது வெளிவந்த செயற்பாடுகள். 19-42

3.1 ஆற்றுகையின்போது உருவாக்கப்பட்ட பாடல்கள். 19-23

3.2 ஆற்றுகையினூடாக உருவாகிய நாடக எழுத்துருக்கள். 24-41

3.3 ஆற்றுகைச்செயற்பாடுகள் உருவாக்கப்பட்ட பின்னணியும், முறைமையும். 42-43

இயல்-04 ஆய்வின் போது எதிர்கொண்ட சவால்கள்,

-முறைமைகள், கருத்துக்கள். 44-51

4.1 ஆற்றுகையின் போது எதிர்கொண்ட சவால்கள். 44-46

4.2 ஆற்றுகை பற்றிய முதியோர்கள், ஊழியர்களினது மனப்பதிவுகள். 47-50

4.3 ஆற்றுகையில் பங்குகொண்ட முதியவர்களின் விபரம். 51

முடிவுரை 52-53

உசாத்துணைகள் Viii

பின்னிணைப்பு

புகைப்படங்கள். ix - x

282

# ஆற்றுகைகள் மூலம் முதியோர் இல்லத்தில் வாழும் முதியவர்களினை ஆற்றுப்படுத்தல்.

(மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள ஏழைகளின் சிறிய கன்னியர்மட வயோதிபர் இல்லத்தினை மையப்படுத்தியது)

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
06 JAN 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீவாகீசன்.

EASTERN UNIVERSITY SRI LANKA
PER ARDUA AD SCIENTIAM

FAC282
Project Report
Library - EUSL

நுண் கலைத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
இலங்கை.

2013

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வு அறிமுகம்.

இன்று பல இடங்களிலும் சிறுவர்கள், பெண்கள் பற்றி வாழ்வு, உரிமை சார்ந்து பேசப்பட்டுவரும் சூழ்நிலையில் முதியோர்கள் பற்றி பேசவேண்டிய தேவை அனைவராலும் உணரப்பட்டுள்ளது. அறுபது, எழுபது வருடம் வாழ்ந்த அந்த அனுபவம் அவர்களுடனேயே அழிந்து விடாது இளம் தலைமுறையினருக்கு கையளிக்கப்பட வேண்டிய தேவையாக உள்ளது. இது குடும்பச்சூழ்நிலையில் சிறப்பாக இயல்பாகவே இடம்பெறும். ஆனால் முதியோர் இல்லங்கள்வாழ் முதியவர்களிடத்து இத்தன்மை அரிது. முதலில் அவர்கள் தம் சமூகத்தில் இருந்து புறம்தள்ளப்பட்டு தனியாக விடப்பட்டுள்ளோம் எனும் மனநிலையை மாற்றவேண்டும். தம்மையும் சாதாரண வாழ்க்கை வாழ்பவர்கள் என்ற உணர்வினை ஏற்படுத்தி தமது ஆற்றல்களினை வெளிக்கொண்டுவர முனைய வேண்டும்.

பொதுவாகவே அனைவரது பார்வையும் முதியோர் இல்லத்துவாழ் முதியவர்களிடத்து குறைவாகவே உள்ளது. அவர்களிடம் இருக்கும் தாழ்வு மனப்பாங்கினை நீக்கியும், வாழ்க்கையின் எப்பராயத்திலும் எதுவும் செய்ய இடமளிக்கும் என்ற தன்னம்பிக்கையுடன் செயற்படும் ஆற்றலினை வளர்த்து அவர்களது ஆற்றுகைகள் ஊடாக தம்மைத்தாமே ஆற்றுப்படுத்த விளையவேண்டும், எனும் எண்ணத்தினை வளர்க்கின்றது. இதனூடாக தமது வாழ்வின் துன்பகரமான நிகழ்வுகளினை மறந்து தனிமையை நினைத்து வருந்தாது தனிமையை தமது பலமாக எண்ணி அதனூடாக அவர்களை இயங்க வைப்பதனையே இவ்வாய்வு எடுத்துக்கொள்கின்றது. தனிமையை தமது பலமாக மாற்றுவதற்கான ஆற்றுகைகள் அவர்களிடம் சுதந்திரமாக விடப்படுவதும், அதனூடாக அவர்களே பேசும் அவர்களது முதியோர் இல்ல வாழ்க்கையின் ஒவ்வொரு இன்பங்களையும், திறமைகளினையும் பேசும் நாடகத்தினை உருவாக்கி அவர்களுக்கு ஆற்றுகை செய்வதனூடாக அவர்களிடம் மற்றுமோர் தன்னம்பிக்கையினையும், துணிவையும், மகிழ்ச்சியினையும் ஏற்படுத்தி மேலும் அவர்களை வெற்றியுடன் இயங்கவைத்தல் என்பதனையே இவ் ஆய்வு குறிப்பிட முயல்கின்றது.